மாட்டாது. அதற்கு அடுத்த நாள் ஆட்டோகிளேவிலே போட்டு எடுத்து வைக்கவேண்டுமென்ற ஒரு முறையை வகுத்து நாங்கள் கொடுத்திருக்கிறோம். இது மிகச் சிறப்பாக இருக்குமென்று எக்ஸ்பர்ட்ஸ் சொல்லியிருக்கிறார்கள். எனவே அதுபற்றி நாம் பயப்படுகிற அளவிற்கு ஒன்றும் நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 246, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

246—

திருச்சிராப்பள்ளி பாய்லர் தொழிற்சாலை— கன்னியாகுமரிக்குப் பேருந்துகள் இயக்குதல்

***36003**—திரு. த. ரத்தினவேல்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி பாய்லர் தொழிற்சாலையிலிருந்து நாகர்கோவில், கன்னியாகுமரிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வென்றாரும், வெல்லாரும் இல்லாத வகையில் ஆட்சிபுரியும் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏற்கெனவே பி.எச்.இ.எல் பகுதியிலிருந்து சென்னைக்கு பேருந்து விடப்பட்டு, லாபகரமான முறையில் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே பணிபுரிகிற தொழிலாளர்கள் பயன்பெறுகின்ற வகையில் இந்த ஆண்டு இல்லையென்றாலும் அடுத்த ஆண்டாவது பேருந்து விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருச்சி வழியாக கன்னியாகுமரிக்கு இயக்கப்படுகின்ற பேருந்துகளில், அந்த பாய்லர் தொழிற்சாலையின் வழியாக இயக்கப்படுமா என்ற கேள்விதான் இங்கே கேட்கப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் நான் இல்லையென்று சொன்னேன். காரணம் இதற்கு முன்னாலே இயக்கப்படுகிறபோது திருச்சியிலிருந்து பாய்லர் தொழிற்சாலை வரையிலும், இயக்குவதற்கு 14 கிலோமீட்டர் சென்று திரும்பி வரவேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 28 கிலோமீட்டர் திருச்சியிலிருந்து மறுபடியும் அந்த பாய்லர் தொழிற்சாலைக்கு சென்று திரும்ப வேண்டியிருக்கிற காரணத்தினால் பயணிகள் அதிலே பயணம் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தினால்தான் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாய்லர் தொழிற்சாலைப் பகுதியில் தனியாக தொழிற்கூடங்கள், சுமார் 300-க்கும் மேற்பட்ட தொழிற்கூடங்கள் இருக்கின்றன. 20,000 தொழிலாளர்கள் அங்கே பணியாற்றுகிறார்கள். நாகர்கோவில், கன்னியாகுமரி, கேரள மாநிலப் பகுதியினைச் சார்ந்த தொழிலாளர்கள் அதிகமாக பணிபுரிகின்ற காரணத்தினால் தனியாக ஒரு பேருந்து பாயிலர் தொழிற்சாலையிலிருந்து நேரடியாக நாகர்கோவிலுக்கு விடப்பட்டால் நிச்சயமாக அந்தப் பகுதியிலே போக்குவரத்திற்கு உதவிகரமாக இருக்குமென்பதை தொழிலாளருடைய வாழ்விலே இன்றைக்கு ஒளிவிளக்கு ஏற்றி வைத்துக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி பேருந்து நிலையத்திலிருந்து தினந்தோறும் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக புறநகர் பேருந்துகள், நகரப் பேருந்துகள் - -134 பேருந்துகளை இயக்குகிறோம். அதிலே ஏறத்தாழ 572 நடைகள் அங்கே இயக்கப்படுகின்றது. ஆகவேதான் அங்கே திருச்சியிலிருந்து பாய்லர் தொழிற்சாலைக்குச் சென்று கன்னியாகுமரிக்குச் செல்வது சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னேன். மீண்டும் அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 247, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.